*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய*www.iaraindia.com
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# பழந்தமிழரின் குலக்குறியும் அறநெறிக் கோட்பாடும்

**முனைவர் ஏ.ராஜ்மோகன்**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தனலட்சுமி சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி.
மாமல்லபுரம், சென்னை -104

**முன்னுரை**

பண்டைய திணைக்குடி, மற்றும் இனக்குழு மக்கள் தம்தம் வாழ்வியலுக்கு பெரும் துணையாக விளங்கும் குலக்குறிப் பொருட்களை தம் அடையாளப் பொருளாக, வாழ்விடப்பொருளாக, உணவுப் பொருளாக, ஒப்பணைப் பொருளாக பயண்படுத்தியது போல சில சூழல்களில் அந்ததந்தக் குலக்குறிப் பொருட்களை விலக்கிவைத்தும், அதனை போற்றி பாதுகாத்தும் வந்துள்ளனர். எனவே ஒவ்வொரு இனக்குழுவும், அரசர்களும் தங்கள் குலக்குறியுடன் சமுக அறநெறியினை கடைப்பிடித்துள்ளனர். அதனைக் குறித்த செய்திகள் சங்க அகப், புறப்பாடல்களில் அதிகம் காணப்படுகின்றன. அதனை புறமணமும் குலக்குறிய அறநெறியும், மனவுணர்வும் குலக்குறிய அறநெறியும், புனிதப் பொருளும் அறநெறியும், உறவுமுறைக் குலக்குறியும் அறநெறியும், கொடைப் பொருளும் குலக்குறி அறமும், குலக்குறி மாலையும் அறநெறியும், காவல் மரமும் அறநெறியும் என்ற முறையில் ஆராய்ந்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**குலக்குறியும் அறநெறியும்**

பழங்குடிமக்கள் தம் குலக்குறிகள் மீது மிகுந்த மரியாதை செலுத்துவர். அவற்றை இழிவுபடுத்துவதோ கொல்லுவதோ கூடாது என்ற நடமுறையை ஓர் அறநெறியாகவே கடைப்பிடிப்பர். ”ஒரு குலக்குறிக் குலத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் குலக்குறியின் தங்களுடைய குலக்குறி உணவாகப் விலங்கை வேட்டையாட மாட்டார்கள் அதனைக் கொல்லவோ புசிக்கவோ மாட்டார்கள். குலக்குறியானது விலங்காக இராமல் வேறு ஏதேனுமாக இருக்குமேயானால், எவ்வகையிலும் அதனைப் பயன் படுத்துவதிலிருந்து விலக்கிவிடுவார்கள் குலக்குறியைக் கொல்லவோ புசிக்கவோ கூடாது என்பது தொடர்பான விதிகள் மட்டுமே விலக்கல்கள் அல்ல சில சமயங்களில் குலக்குறியைத் தொடுவதினிறும் கூட அவர்கள் தடுக்கப்படுவார்கள் அல்லது கண்ணால் பார்த்தலும் கூடாது குலக்குறியின் பெயரைச் சொல்வது கூட தவிர்க்கப் படுவதும் உண்டு. தங்கள் குலக்குறியைக் போல்வனவாகிய விலக்கல்களைக், காக்கக்கூடிய இவை மீறுவார்களேயானால் தீராத நோய், மரணம் ஆகியவற்றால் தண்டிக்கப்படுவர் என நம்பினர். இது போன்ற விலக்கல் முறையை நடமுறைப்படுத்தியும் வந்தனர். இதன் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் மூலம் தமது குலக்குறிகளுக்கு ஒரு புனித தன்மையைக் கற்பித்து அறநேறியாக பின்பற்றுவர்.

**புறமணமும் குலக்குறிய அறநெறியும்**

புறமணம் என்பது ஒரு குலக்குறி உடைய குலமாந்தர்கள் புற குலக்குறியை கொண்ட குலமாந்தர்களை மணப்பதைக் குறிப்பதாகும். அவ்வாறு திருமணம் செய்வார்கள் ஆயின் அக்குலத்தில் இருந்து அம்மக்களை விலக்கி வைப்பது குலமாந்தர்களின் அறம்மாகும். புறமணம் சங்க இலக்கியத்தில் நடந்தற்கான குறிப்பினை குறிப்பிடும்போடு முதலில் சிலம்பு கழித்தல் என்கிற சடங்கு, திருமணச் சடங்குகளில் இடம்பெறுவதை பார்கலாம். சிலம்பு குழந்தைப் பருவத்தில் அணியப்படும் ஓர் அணிகலன். இக்காற் சிலம்பு அணிதல் தலைவிக்கு மட்டுமே உரியதாகும்.

**”நும்மனைச் சிலம்பு கழீஇய அயரினும்**
**எம்மனை வதுவை நன்மணம் கழீகெனச்” (ஐங்.43)**

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் சிலம்பு கழிக்கும் நிகழ்ச்சி, திருமண நிகழ்ச்சிக்கு முன்னர் நிகழ்த்தப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் குறுந்தொகைத் தலைவி ஒருத்தி

அவளுடைய காதல் திருமணம் தடைப்படுமோ என்ற ஐயம் எழுந்த போது தலைவனுடன் சேர்ந்து தன்தமர் அறியாதவாறு பாலை நிலத்தைக் கடந்து சென்றாள் என்பதை

**"வில்லோன் காலன கழலே**
**தொடியோள் மெல்லடி மேலவும் சிலம்பே**
**நல்லோர் யார்கொல் அளியர் தாமே (அகம்.327)**

என்று கூறுகின்றது. இப்பாடலில் வில்லேந்திய இவன் காலில் வீரக்கழல்கள் உள்ளன. வளையலணிந்த இவள் வெள்ளடிகளில் சிலம்புகள் உள்ளன என்று வரும் அடிகளிலிருந்து இன்னும் அவர்கள் திருமணம் செய்து கொள்ளாதவர்கள் என்ற கருத்து உணர்த்தப்பட்டுள்ளது. எனவே சங்க காலப் பெண்கள் திருமணம் நடைபெறும் வரை காலில் சிலம்பணிந்திருந்தனர் என்பது பெறப்படும். தலைவியின் இளமைக் கால விளையாட்டு பற்றிய நிகழ்ச்சியை எண்ணித் தாய் கூறும்

**"சீர்கெழு வியகைர்ச் சிலம்புநக இயலி**
**சீரை யாயமொடு பந்துசிறி தெறியினும் "(அகம்.87)**

அகநானூற்றுப்பாடல் தலைவி தமர் அறியாமல் தலைவனோடு உடன் சென்றமையை உணர்த்தியுள்ளது. மற்றொரு அகப்பாட்டாலும், தலைவனைச் சந்திக்க வந்த தலைவி நள்ளிரவில் அவள் எழுந்து செல்லுவதை அவளது சிலம்பின் ஒலியால் வீட்டார் அறிந்து விடலாகாதே என்று அதன் ஒலிப்பினைக்கட்டி ஒடுக்கி வந்து சென்றதை

**அருஞ்சிலம்பு ஒடுக்கி அஞ்சினள் வந்து**
**துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோள் (அகம்.95)**

என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு தலைவன் தலைவியின் அன்பையும் அறிவையும் எண்ணிக் கூறிய பாடலிலும் சிலம்பு பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது. உடன்போக்கு நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடும் மற்றொரு பாடலிலும் இதேசெய்தி இடம்பெற்றுள்ளது. அதாவது தலைவனுடன் செல்ல விரும்பிய தலைவி படுக்கையினின்றும் இரவில் எழுந்து செல்லும் பொழுது சிலம்பின் ஒலி கேட்டுத் தாய் விழித்துக் கொள்ளுவாள் என்று தலைவி சிலம்பினைக் கழற்றிக் கையில் எடுத்துக்கொண்டு சென்றதை

**"அரிபெய்து பொதிந்த தெரிசிலம்பு கழீஇ**
**யாயறி வுறுதல் அஞ்சி வேயர்**
**பிறங்கல் மலையிறந் தோளே" (அகம்.321)**

என்ற பாடலால் அறியலாம். மேலும் தலைவி உடன்போகிய காலத்து உறவினரில்லாத புதியதொரு நாட்டில் திருமணம் செய்து கொண்டாலும் அங்கும் சிலம்பு கழித்தல் நிகழ்ந்தது என்பதை

**"உள்ளாது கழிந்த முள்ளெயிற்றுத் துவர்வாய்த்**
**சிறுவன் கண்ணி சிலம்பு கழீஇய**
**அறியாத் தேஎத்தள் ஆகுதல் கொடிதே" (அகம்.385)**

என்பதை அகநானூற்றுப் பாடல் கூறுகின்றது. மேலும் "சிலம்பு கழீஇய செல்வம் பிறருணக் ஃகழிந்தவென் னாயிழை யடியே" (நற்றி.275)என்னும் நற்றிணைப் பாடல் பகுதியால் சிலம்பு கழித்தல் ஒரு செல்வம் என்றும் அதனைக் காணும் பேற்றை ஈன்ற தாய்க்கு அளிக்காது பிறர்க்கு அளிக்கப் போயினாளே தன்மகள் என்றும் ஒரு தாய் வருந்தியுள்ளாள். சிலம்பினை நீக்கினமையால் பரலோசை கேட்காது. எனவே இவள் மணமானவள் என்று அறியப்பட்டது. சிலம்பைக் கழித்தல் இருந்ததை நீக்குதல் என்பது ஒரு காரணமாகவும், அதுவே திருமணத்தின் அறிகுறியாகவும் ஆயிற்று. இது குறித்து கருத்துரைக்கும் வ.சுப. மாணிக்கம். அவர்கள் "குழந்தை முதலே கிடக்கும் சிலம்பின் நீக்கம் இவள் மனைவியானாள் என்பதை முழுச் சமுதாயத்திற்கும் காட்டிவிடும் (தமிழ்க் காதல்:ப:16) எனக் கூறுகின்றார். சிலம்பு கழித்தல் என்னும் சடங்கு, திருமணத்திற்கு முன் நிகழ்வதின் காரணம் தலைவி திருமணம் செய்து கொண்டு (புறமணம்) வேறொரு குடிக்கு செல்வதால் தன் குலக்குறி அடையாளமான சிலம்பை தவிர்து சென்றுள்ளது குடியின் அறநெறியினை புலப்படுத்துகிறது.

**மனவுணர்வும் குலக்குறிய அறநெறியும்**

சங்கப் பெண்கள் தம் கையில் அணியும் சங்கு வளையல்களை குலக்குறியாக நினைத்து சில சூழலில் அணிவதை தவிர்துள்ளனர். சான்றாக தலைவன் தலைவியைப் பிரிந்து இல் பரத்தையிடம் சென்று விடுகிறான். கொஞ்சநாளில் அங்கிருந்து விலகி சேரி பரத்தையரிடம் தொடர்பு கொள்கின்றான். இதனை அறிந்த இல்பரத்தை தன்னிடம் தலைவன் இருப்பதாய் தலைவி இன்னும் நினைந்து கொண்டிருப்பாள் எனக் கலங்கி கோபம் மேலிட தன் வளையல்களை உடைத்து எறிகிறாள். இக்காட்சி அகநானூற்றில்

**"காவிரி வைப்பின் போஞர் அன்ன, என்**

**செறிவளை உடைத்தலோ இலனே" (அகம். 186)**

இடம் பெறுகின்றது. மேலும், குல மகளிர் அல்லாத பரத்தையர் தம்மை விரும்பும் ஆடவர் பிரிந்து வேறொருத்தியிடம் சென்று விட்டால் தம் வளையல்களை உடைத்துத் தாம் கொண்ட வெறுப்பினை வெளிக்காட்டுவர் இவ்வழக்கம் இருந்தமையை,

**"என்னொடு திரியேன் ஆயின் உடைகவன்**
**நேரிறை முன்கை வீக்கிய வளையலே (அகம்.336)**

என அகநானூறு சான்று தருகின்றது. இவ்வாறு பெண்கள் கோபத்தில் வளையல்களை உடைத்து மனவுணர்வை வெளிப்படுத்தியுள்ளனர். இவ்வாறு சங்கு வளையல் மகிழ்ச்சியின் அடையாளமாகவும் குலக்குறி அடையாளமாகவும் விளங்குவதால் மகிழ்ச்சியில்லாத போது அதை அணிவதைத் தவிர்த்துள்ளது குடும்ப அறம்மாக பார்க்கமுடிகிறது.

**புனிதப் பொருளும் அறநெறியும்**

குலமாந்தர்கள் தங்கள் வாழ்வில் நன்மைகளை உண்டாக்கும் தாவரங்கள் அல்லது விலங்குகளை வங்குவர். அதுப்போன்ற குறிப்பினை குறுந்தொகையில் வேங்கையை விலக்கிவைத்த காட்சி ஒன்று காணப்படுகிறது. அதாவது வேங்கை என்பது புலியைக் குறிப்பதாக இருந்தாலும் அது வேங்கை மரத்தைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வேங்கை மரம் வேனிற்காலத்தில் பூக்கும். இம்மரம் திருமணத்தைக் கணித்துக் கூறும் இயல்பினை உடையதாகக் கருதப்படுகின்றது. குழந்தைகள் இம்மரத்தின் பூக்களைப் பறிக்கச் சென்றால் அம்மரத்தின் அருகில் சென்று புலி புலி என்று கூறினால் அம்மரம் வலைந்து பூவை பறிக்கக் கொடுக்கும் என்ற நம்பிக்கை அக்காலத்தில் இருந்துள்ளது. இம்மரத்தில் இளஞ்சிறார் ஏறாது புலிப்பூசல் செய்தனர் என்பதை,

**"கன்றாற்றுப் படுத்த புன்றலைச் சிறார்**
**வேங்கை மலர்பத நோக்கி**
**ஏறா திட்ட வேமப் பூசல்" (குறுந்.241)**

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இதனைப் புலிப்பூசல் அல்லது வேமப் பூசல் என்பர். இது குறித்து கருத்துரைக்கும் உ.வே.சா. அவர்கள் வேங்கை மரத்தில் தெய்வம் உறைவதால் வேங்கை மரத்தின் மேல் சிறுவர்கள் ஏறமாட்டார்கள் என்று குறிப்பிடுகின்றார். இங்கு வேங்கை மரம் குலக்குறி மரமாகவும் அதனால் குலத்தின் புனிதப் பொருள் என கருதி ஏறமல் விலகியுள்ளது குலமாந்தர்களின் அறசெயலாக காணமுடிகிறது.

**உறவுமுறைக் குலக்குறியும் அறநெறியும்**

குலமாந்தர்கள் தங்கள் குலக்குறி பொருளான விலங்கு அல்லது தாவரங்களை மனித உறவாக கருதி அவற்றுடன் பல்வேறு வகையில் தொடர்புடையவர்களாக அங்கம் வகிக்கின்றனர். இதுப்போன்ற குறிப்புகள் சங்க அகப்பாடல்களில் காணப்படுகின்றன. சான்றாக "புன்னை" மரம் தங்கை என உறவாவதால் அம்மரத்தின் அடியில் காதலன் அவளுடன் உறவாட வந்ததைத் தவிர்த்து தோழி தலைவனுக்குக் கூறுகிறாள். அதைப் (நற்றி.172) பாடல் குறிப்பிடுவதிலிருந்து. நெய்தல் நிலமக்களின் குலக்குறியான புன்னையினை மரத்தை மனித உறவான சகோதரியாக நினைத்து தன் சந்திப்பை தவிர்த்துள்ளது சிறந்த அறமாகும்.

**கொடைப் பொருளும் குலக்குறி அறமும்**

குலமரபினை உடைய மக்கள் வாழும் பகுதியில் இடம்பெறும் குலக்குறிப் பொருட்களான உயிருனங்கள் மீது இரக்கவுணர்வு கொண்டுள்ளதையும் தம் அடையாளச் சின்னமானதை பிற குழுவுடைய மக்களுக்கு பரிசு பொருளாகவும் உணவுப் பொருளாகவும் அளித்துள்ளதை சங்கப் பாடல்கள் சான்று பகர்கின்றது. ஏழு வள்ளல்களாக போற்றப்படும் பேகன், பாரி, காரி, ஆய், அதியமான், நள்ளி, ஓரி என்னும் பெயருடையோர் வள்ளல் தன்மை மூலமாக குலக்குறி குறித்த பதிவுகள் கொடைமடத்தில் காணமுடிகின்றது. இவர்கள் எழுவரும் காலத்தால் ஒத்தவரென்று கொள்ளினும் வள்ளல் தன்மையிலும் இன்னவர்தாம் சிறந்தாரெனக் கூற இயலாதவாறு புகழ்கொண்டு திகழ்கின்றனர். பேகன் மலையில் திரியும் மயில் குளிரில் அகவியது கண்டு தனது கலிங்கத்தை அம்மயிலுக்குப் போர்த்தினான் என்பதை

**"கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய**
**அருந்திரல் அணங்கின் ஆவியர் பெருமகன்**
**பெருங்கல் நாடன் பேகன்." (சிறுபா.85-87)**

என்ற சிறுபாணாற்றுப்படை பாடல் குறிப்பிடுகின்றது. பேகன் செய்த கொடை மடத்தைப் பற்றி

**"மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளி**
**படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை**
**கடாஅ யானைக் கலிமான் பேக" (புறம். 145)**

என்ற பரணர் பாடல் குறிப்பிடுகின்றது. இதேப் போன்று முல்லைக்கொடி படர்வதற்குரிய கொழு கொம்பாகத் தனது தேரை ஈந்தவன் பறம்பு மலையைச் சார்ந்த பாரி என்பதை (சிறுபா.89-

91) சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. மேலும் தேனீக்கள் தேன் உண்ணுமாறு தேன் சுரக்கும் சுரபுன்னை மரங்கள் நிறைந்த நீண்ட வழியிலே காணப்பட்ட முல்லைக் கொடிக்குத் தனது பெரிய தேரை அளித்ததை “தேருடன் முல்லைக்கு ஈத்த“ பாரியின் கொடைத்திறனைக். (புறம்.201) குறிப்பிடுகின்றது

பேகன், பாரி ஆகிய இருவரும் அஃறிணைப் பொருட்களுக்கு இரங்கி அருள் செய்தமை வியப்பிற்குரியவாகவும் உள்ளன. பேகன், பாரி ஆகிய இருவரும் மயிலிடத்தும் முல்லைக்கொடியிடத்தும் காட்டிய தொடர்பினை பார்க்கும் போது இனக்குழு மனிதன் தனக்கு இணையாக, தம் மக்களுள் ஒருவராகக் கருதி ஒரு விலங்கையோ, பறவையையோ, தாவரவகையையோ அணுகி நடந்து கொண்டால் அது நிச்சயம் குலக்குறி இயல்புகளில் ஒன்றாக இருக்க வேண்டும். தம் கூட்டத்தின் குலக்குறி விலங்காக, பறவையாக, தாவரமாக உள்ள ஒன்றினுக்கு இடையூறு நேர்ந்தாலோ இழப்பு நேர்ந்தாலோ தன் கூட்டத்தினரில் ஒருவருக்கு எப்படி ஓடிச் சென்று உதவுவானோ அதனைப் போலவே அக்குலக்குறி விலங்கிற்கும் உதவ வேண்டும் என்பது குலக்குறி மாந்தர்களின் கடமையாகும். எனவே அதன் அடிப்படையில் பாரி, பேகன் ஆகியோரின் செயல்பாடுகள் அமைந்துள்ளன எனலாம். இதன் மூலம் மயில், முல்லை ஆகியவை இரக்க உணர்வு அடிப்படையில் குலமாந்தர்கள் உதவிசெய்துள்ளது முதன்மையான அறமாகும்.

**குலக்குறி மாலையும் அறநெறியும்**

ஒவ்வொரு குலமாந்தர்களும் தங்கள் குலத்தின் அடையாளங்களை புறவயமாக ஒப்பனைகளில் கலைவடிவமாக வெளிப்படுத்துவர். அது அவர்களின் இனத்திற்குறிய அடையாளமாக விளங்கும் குலக்குறியின் உறுப்புகள், அல்லது உருவங்களும் இடம்பெறும். இதுப்போன்ற கூறுகள் கோவூர்கிழார் பாடிய புறநானூறில் உள்ள பாடல் ஒன்று ‘‘நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி’’ என்ற இரண்டு சோழமன்னர்களும் போரிடும் நேரத்தில் இருவரிடமும் சமாதானம் பேசி, போரை நிறுத்த முயன்ற போது பாடிய பாடலில்

**‘‘நின்ன கண்ணியும் ஆர் மிடைந்து அன்றே, நின்னொடு**
**பொருவோன் கண்ணியும் ஆர் மிடைந்துஅன்றே’’ (புறம் .45)**

என்ற குறிப்பு காணப்படுகின்றது. இதில் மூவேந்தர்களின் அடையாள மாலை குறித்த அடையாளக்குறிப்பும் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி ஆகிய இருவருக்கும் ’ஆர்’ என்னும் ஆத்தி மாலை குலக்குறி மாலை இடம்பெற்றுள்ளதை காணமுடிகின்றது. இங்கு ஒரே குலத்தில் பிறந்தவர்கள் சகோதர உறவு உடையவர்கள் ஆவர். அதனால் போரினை தவிர்த்துள்ளது குலமாந்தர்களின் அறசெயலாக பார்க்க முடிகிறது.

**காவல் மரமும் அறநெறியும்**

அரசர்கள் தங்களின் அடையாளச் சின்னங்களாக காவல் மரங்களை கொண்டிருந்தனர். அதனை தங்களின் குலக்குறியாகக் கருதி அரசர்களும் வீரர்களும் பாதுகாத்து வந்துள்ளதை சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. அம்மரத்தை ஊரின் புறங்களிலும் நடுவிலும் வளர்த்து வந்துள்ளனர். காவல் மரங்களை எரிப்பது எதிரி மன்னரை வெல்வதும் அந்நாட்டை கைப்பற்றுவதற்குமான ஒப்பானது என மன்னர்கள் கருதியுள்ளனர். அவற்றினை குலக்குறி அடையாள மரமாக கருதி அதற்கு தீங்கு வராமலும் அப்படித் தீங்கு வந்தால் தம் அரசர் குலத்திற்குத் தீங்கு நேரும் என்ற நம்பிக்கையால் அதனை காத்தும் வந்துள்ளனர். அதனால் காவல் மரத்தை வெட்டுவதோ, அதன் தழைகளைப் பறிப்பதோ கிளை, இலை, பூ, காய் உறுப்புகளை தொடுவதோ கிடையாது. வேறு எந்த வகையிலும் குறை ஏற்படாதவாறு அதனை தம் குலத்தின் புனிதப் பொருளாகப் போற்றப்பட்டு பாதுகாப்பான முறையில் காத்து வந்ததை சங்கப் பாடல்களில் காணமுடிகிறது சான்றாக்

**கடிமரந் துளங்கிய காவு (புறம். 23)**
**கடிமரந் தடிய மோசை தன் ஊர் (புறம். 36)**
**கடிமரந் தடித லோம்பு (புறம். 57)**

மேற்கூறிய பாடல்களில் கடிமரம் சொல்லுக்குக் காப்பு மரம் அல்லது காவல்மரம் என்னும் பொருளை குறிப்பிடுகிறது. பழந்தமிழக மன்னர்கள், காவல் மரத்தைத் தன்மானத்தின் குறியீடாக, உயிரினும் மேலாகப் பாதுகாத்துள்ளது சிறந்த அறம்மாக கருதமுடிகிறது.

**முடிவுரை**

- பண்டைய திணைக்குடி, மற்றும் இனக்குழு மக்கள் தம்தம் வாழ்வியலுக்கு பெரும் துணையாக விளங்கும் குலக்குறிப் பொருட்களை தம் அடையாளப்பொருளாக, வாழ்விடப்பொருளாக, உணவுப் பொருளாக, ஒப்பணைப் பொருளாக பயண்படுத்தியது போல சில சூழல்களில் அந்ததந்தக் குலக்குறிப் பொருட்களை விலக்கிவைக்கவும் செய்துள்ளனர்.

- விலகள் என்பது தவிர்த்தல் அல்லது மறுத்தல் என்பதாகும். இவை சிலம்பணி தவிர்த்தல், புன்னையை தமக்கையாக ஏற்று அதன் அருகில் செல்லாமல் தவிர்த்தல், (புன்னையை தவிர்த்தல்) கணவன் அல்லது மகிழ்ச்சி இல்லாத நேரத்தில் வளையல் அணிவதை தவிர்த்தல் அல்லது உடைத்தல் நிலையிலும் மற்றும் தாவர, விலங்கு குலக்குறி விலகல் போன்ற நிலைகளும் வெளிப்படுகின்றன.
- விலகல் முறையினை அகமாந்தர்கள் பல்வேறு நிலைகளில் தங்களின் குலக்குறிப் பொருட்களை தவிர்த்துள்ளனர். அதாவது சிலம்பு, புன்னை, வளை, வேங்கை, ஆகியவற்றை குலக்குறி என்பதால் தவிர்த்துள்ளனர் இவற்றுள் சிலம்பு கழித்தல் என்னும் சடங்கு, திருமணத்திற்கு முன் நிகழ்வதின் காரணம் தலைவி திருமணம் செய்து கொண்டு (புறமணம்) வேறொரு குடிக்குச் செல்வதால் தன் குலக்குறி அடையாளமான சிலம்பை தவிர்தலுக்காக செய்வது என அறியலாம்.
- வேந்தர்கள் தங்கள் குலக்குறியான காவல் மரத்தினை பாதுகாத்துள்ளதும், குறுநில மன்னர்கள் குலக்குறி உயிரினங்களை போற்றிப் பாதுகாத்துள்ளதும் குலக்குழு மாந்தர்களின் கடமையாகபார்க்க முடிகிறது.

**பார்வை நூல்கள்**

1.பாலசுப்பிரமணியம் .கு.வெ - அகநானூறு (தொகுதி1,2) வெளியீடு 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை 98.
2.பாலசுப்பிரமணியம் .கு.வெ - பத்துப்பாட்டு பகுதி-1, பகுதி.2, வெளியீடு 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை 98.
3.பாலசுப்பிரமணியம் .கு.வெ - ஐங்குறுநூறு, வெளியீடு 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை – 98.
4.பாலசுப்பிரமணியம் .கு.வெ - புறநானூறு (தொகுதி1,2), வெளியீடு 2007, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை - 98.